
# திராவிடத்தால் வாழ்கிறோம்

800

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

5

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# சமூக மாற்றத்துக்குக் குரல்கொடுத்த ‘தாயில்லாப் பிள்ளை’!



‘தாயில்லாப் பிள்ளை’ திரைப்படத்தை, முழுக்க முழுக்கத் திராவிட இயக்கத்தின் கொள்கையைப் பேசுகிற திரைப்படமாகப் படைத்திருப்பார் கலைஞர். 1950 - 60-களில் நிலவிய பார்ப்பன அரசியல் ஆதிக்கம், சமூக ஆதிக்கம் ஆகிய இரண்டையும் ஜனநாயக வழியில் எதிர்த்துப் போராடி வெற்றிபெறுவது, என்பதையே திரைக்கதை யாகவும் வசனமாகவும் கலைஞர் எழுதியிருப்பார்.

இரண்டாம் பாதியில் நிகழும் கதையில்தான், ஜாதி ஒழிப்புக்கும் சமூக மாற்றத்திற்குமான கலகக் குரல் அக்ரஹாரத்திலிருந்தும் ஒலிக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக சொல்லும் வகையில், கதை முடிச்சுகளை அவிழ்த்திருப்பார் கலைஞர்.

### இரண்டாம் பாதி கதை

சாஸ்திரி தூக்கிச் சென்ற குழந்தைக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு உடல்நிலை மோசமடைகிறது. மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு, ‘குழந்தைக்குத் தாய்ப்பால் அவசியம்’ என்கின்றனர். சாஸ்திரி, ஜாதி ஆச்சாரத்தையும் தனது வீராப்பையும் ஒதுக்கி வைத்து விட்டு, தன் மனைவியை அழைத்து வர வேலையாள் புண்ணியவானை அனுப்புகிறார்.

பார்வதியோ மற்றொரு குழந்தையோடு வீட்டுக்கு வர, ‘அது யார் குழந்தை?’ என சாஸ்திரி கேட்க, ‘அது அனாதைக் குழந்தை. அதையும் நான் வளர்ப்பதாக வாக்குக் கொடுத்து விட்டேன்’ என்கிறார். ‘அதன் குலம் என்ன, கோத்திரம் என்ன, அதை வெளியே விட்டு விட்டு வீட்டுக்குள் போ’ என்கிறார் சாஸ்திரி.

பார்வதி, ‘என்னால் முடியாது, நான் இந்தக் குழந்தையோடுதான் வருவேன் என்று சொல்ல, வேறு வழியின்றி தனது குழந்தை பிழைக்க வேண்டுமே என்ற அவசரத்தில் வீட்டுக்குள் அனுமதிக்கிறார். பிறகு அந்தக் குழந்தையைப் புழக்கடையில்தான் (கொல்லைப் புறத்தில்) வைத்து வளர்க்க வேண்டும் என்று கட்டளை இடுகிறார். அதன்படி, அவர்களது உண்மையான பார்ப்பனக் குழந்தை, மாட்டுத் தொழுவத்தில் வளர்கிறது. ஏழைக் குடியானவன் பொன்னனின் குழந்தையோ, சாஸ்திரியின் குழந்தையாக சகல உரிமைகளுடனும் சௌகரியங்களுடனும் வளர்க்கப்படுகிறது.

கல்வி கற்கும் பருவம் வந்தவுடன், பொன்னனின் குழந்தைக்குப் பார்ப்பன முறைப்படி வேத மந்திரங்கள் முழங்க சடங்குகள் செய்யப்பட்டு, படிப்புச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. சாஸ்திரியின் உண்மையான மகன், கல்வி கற்க அனுமதிக்கப்படாமல், அவராலேயே அடித்து விரட்டப்பட்டு, மாடு மேய்க்க அனுப்பப்படுகிறான்.

குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள். பதஞ்சலி சாஸ்திரியின் மகனாக வளர்க்கப்படும் பொன்னனின் மகன் சங்கர் (ஜி.முத்துகிருஷ்ணன்) கல்லூரியில் படிக்கிறான்.

மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் சோமுவை (கல்யாண் குமார்), ஒரு கட்டத்தில் பதஞ்சலி சாஸ்திரி வீட்டை விட்டு விரட்டுகிறார்.

### தவிக்கும் தாய்

மகனைப் பிரிந்து வாழ முடியாமலும் சோமுதான் தங்கள் உண்மையான மகன் என்ற உண்மையை, பதஞ்சலி சாஸ்திரியிடம் தெரிவிக்க முடியாமலும் தவிக்கும் பார்வதி அம்மாள் சோமுவிடமே சென்று விடுகிறாள். இறுதியாக சோமுவுக்கும் சங்கருக்கும் உண்மை தெரிய வருகின்றது. ஆனால், குடியானவனின்



படங்கள் உதவி : ஞானம்



மகன்தான் சங்கர் என்ற உண்மையை மறைத்து, இறுதிவரை சங்கரை பதஞ்சலி சாஸ்திரியின் மகனாகவே வாழ வைக்க விரும்புகிறான் சோமு. ஆனால், சங்கர் சோமுவின் வாழ்வைக் கெடுத்து, அவனது சுகபோகங்களைத் தான் அபகரித்து விட்டதாக வருந்துகிறான்.

இதற்கு இடையே சோமு விரும்பும் பெண்ணுக்கு கட்டாயத் திருமணம் நடப்பதை தடுக்க முயற்சிக்கையில் அடியாட்கள் சோமுமீது கொலை வெறித் தாக்குதல் நடத்துகின்றனர். படுகாயம் அடைந்த சோமு, பாரதியின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு காப்பாற்றப்படுகிறான். பதஞ்சலி சாஸ்திரியிடம் சங்கர், தான் அவரது மகன் அல்ல! சோமுதான் அவரது உண்மையான மகன் என்ற உண்மை யைக் கூற அதிர்ச்சி அடையும் சாஸ்திரி மனம் திருந்துகிறார். இறுதியில் ஜாதி ஆச்சாரங் களை எல்லாம் கைவிட்டுவிட்டு, பதஞ்சலி சாஸ்திரி சோமு விரும்பிய பெண்ணையும், சங்கர் விரும்பிய பெண்ணையும், அவர்கள் விருப்பப்படியே ஒரே மேடையில் வைத்துத் திருமணம் செய்து வைப்பதோடு படம் நிறைவடைகிறது. இதுதான் ‘தாயில்லாப்பிள்ளை’ திரைப்படத்தின் கதை.

### படத்தின் அரசியல்

படத்தின் தொடக்கக் காட்சியே பிரசிடென்ட் தேர்தல் பிரச்சாரத்தில்தான் ஆரம்பிக்கும். மேடையில் வீற்றிருக்கும் பார்ப்பனர்கள், தர்மம் நிலைக்க தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறும்போது, தூயமணிக்கு வாக்குக் கேட்டு, எளிய பார்ப்பனரல்லாத மக்கள் ஊர்வலமாக வருகின்றனர்.

அவர்களை ராட்சதக் கூட்டம் (அசுரர் கூட்டம்) என்று பதஞ்சலி சாஸ்திரி பழிக்கிறார். ஆனால், மக்களின் வாக்குகளைப் பெற்று தூயமணி வென்று, பார்ப்பன அரசியல் அதிகாரத்தை முறியடிப்பதாகக் கலைஞர் திரைக்கதையில் அமைத்திருப்பார். அதேபோல பார்ப்பன அதிகாரத்தையும், சமூக மேலாண்மையையும் ஜாதிக் கலப்பு (கலப்புத் திருமணம்) என்கிற வன்முறையற்ற வழியில் முறியடிப்பதாகவும் அமைத்திருக்கிறார்.

அன்றைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான ‘வன்முறை தவிர்த்து வறுமையை ஒழிப்போம்’ என்பதையே ஜாதி ஒழிப்புக்கான வழிமுறையாகவும் கலைஞர் தனது பல திரைப்படங்களில் முன்வைத்துள்ளார்.

ஜாதி ஒழிப்புக்குத் தாக்குதலையோ, பிரிந்து போவதையோ தீர்வாக முன்வைக்க வில்லை. ஒன்று கலப்பதையும் சமூக நீதியையுமே தீர்வாக வைக்கிறார்.

பார்ப்பனரல்லாத, ஏழை பொன்னனின் மகனும் வாய்ப்புக் கிடைத்தால் படித்து முன்னுக்கு வர முடியும் என்பதைக் காட்டும் அதே நேரம், பிறப்பால் பார்ப்பனக் குழந்தையாக இருந்தாலும் வாய்ப்பு மறுக்கப்பட்டு மாடு மேய்க்க அனுப்பப்பட்டால் அது மாடு மேய்த்துக் கொண்டும் அடிமை யாகவும்தான் திரியும். பிறவியிலேயே அறிவாளி என்று எவரும் இல்லை என்பதை இப்படத்தின் மூலமாக கலைஞர் மிகச்சிறப்பாக எடுத்துச் சொல்லி இருப்பார்.

அதேபோல பார்ப்பனர்களாகப் பிறந்த தாலேயே யாரும் எங்களுக்கு விரோதியல்ல, பார்ப்பனியக் கொள்கையே எங்களுக்கு எதிரி என்பதை பாரதி என்கிற கதாபாத்திரம் மூலம் சொல்வார். பார்ப்பனர்களாகப் பிறந்தவர்கள் தங்களது பார்ப்பனச் ஜாதி ஆச்சாரத்தைக் கைவிட்டு, ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்வதோடு மட்டுமின்றி, பார்ப்பனரல்லாதாரின் அரசியல் அதிகாரத்திற்கும், சமூக நீதிக்கும் பாடுபட வேண்டும். பார்ப்பனரல்லாதாரோடு சேர்ந்து போராட வேண்டும் என்பதையும் பாரதி என்கிற அந்தக் கதாபாத்திரம் பேசும்.

ஆர்.எஸ்.மனோகர் அவர் வாழ்நாளில், ஏற்ற கதாபாத்திரங்களில் ஆகச்சிறந்த கதாபாத்திரம் இதுவாகத்தான் இருக்கும். அதே போல பதஞ்சலி சாஸ்திரியின் மகன் சங்கர் பஞ்சகச்சம், குடுமி சகிதமாகக் கல்லூரிக்குச் செல்ல, அங்கு மற்ற மாணவர்கள் அவனைக் கேலி செய்வர். அதனால், அவன் கிராப் வெட்டிக்கொண்டு பேன்ட் சர்ட் மாட்டிக் கொள்வான். இதனைப் பதஞ்சலி சாஸ்திரியால் ஏற்றுக்கொள்ள இயலாது. அப்போது அவரின் தங்கை கணவர் சங்கு, ‘காலத்திற்கு ஏற்ப நாம் மாறுவது தவறில்லை, மாற வேண்டும்’ என்று சொல்வார்.

இவ்வாறு பார்ப்பனர்களின் ஜாதி ஆதிக்கத்தை, சமூக ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதை மட்டுமல்ல, அவர்கள் மனமும் தோற்றமும் மாறி, மற்றவர்களோடு ஒன்று கலக்க வேண்டும் என்பதே ‘தாயில்லாப் பிள்ளை’யில் கலைஞர் முன்வைக்கும் செய்தியாகும். இவ்வாறு ஜாதி ஒழிப்புக்கும் சமூக மாற்றத்திற்குமான கலகக் குரல் அக்ரஹாரத்திலும் ஒலிக்க வேண்டும் என்று சொன்ன திரைப்படமாக கலைஞரின் ‘தாயில்லாப் பிள்ளை’ இருக்கிறது.

**...காட்சி விரியும்**

## ‘திருவாரூர்’ தங்கராசு நூற்றாண்டு விழா!



பெரியாரின் போர்ப் படைக்கு, ‘திருவாரூர்’ தந்த தளகர்த்தர்களில் கலைஞருக்கு அடுத்து முக்கியமானவர் ‘திருவாரூர்’ தங்கராசு. திராவிட இயக்க மேடைகளில் வீரியத்துடன் ஒலித்தது இவரது குரல்.

மூடநம்பிக்கைகளைத் தகர்க்கும் பகுத்தறிவு நாடகங்களையும், புராண இதிகாசங்களில் உள்ள பிற்போக்குத் தனங்களைத் தோலுரிக்கும் நாடகங்களையும் இயற்றி, அவரே முக்கிய வேடங்களில் நடிக்கவும் செய்தார். எம்.ஆர்.ராதாவுடன் இவர் கைகோர்த்த பிறகு, தமிழ்நாட்டின் நாடக மேடைகள் அதிர்ந்தன. ‘ரத்தக் கண்ணீர்’ நாடகத்திற்கு ‘திருவாரூர்’ தங்கராசு எழுதிய வசனங்கள், இன்றைய தலைமுறையையும் வசீகரித்துக் கொண்டிருக்கின்றன.

‘திராவிட ஏடு’ மாத இதழின் வழியாக பெரியாரின் கொள்கைகளை இலக்கியத் தளத்திலும் முன்னெடுத்துச் சென்றவர். கடைசிவரை, கறாரான பெரியார் தொண்டராக வாழ்ந்த திருவாரூர் தங்கராசுவுக்கு ‘பெரியார் விருது’ வழங்கிப் பெருமைப்படுத்தினார் கலைஞர். அந்த விருதுக்குக் கிடைத்த தொகையையும், திருச்சியில் உள்ள தந்தை ‘பெரியார் குடில்’ கல்வி நிறுவனத்திற்கு கலைஞர் கரங்களாலேயே கொடுக்கச் செய்தார் திருவாரூர் தங்கராசு.

அத்தகைய பண்பட்ட பெரியாரியப் பெருந்தொண்டரின் நூற்றாண்டு விழாவை, சென்னையில் இன்று கொண்டாடுகிறது தந்தை பெரியார் திராவிடர் கழகம். அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ‘கோவை’ ராமகிருஷ்ணன் தலைமையில், சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் மாலை 5 மணிக்கு நிகழ்ச்சி தொடங்குகிறது. ‘திருவாரூர்’ தங்கராசு படத்தை அமைச்சர் பொன்முடி அவர்கள் திறந்துவைக்கவுள்ளார். திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, தி.மு.க மாநில மாணவர் அணிச் செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர்கள் அர.திருவிடம், எம்.ஆர். எம்.வாசுவிக்ரம், இயக்குநர் கரு பழனியப்பன், எழுத்தாளர் வாலாசா வல்லவன் உள்ளிட்ட பலர் கருத்துரையாற்றவுள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்



### தாராசுரத்தில் தளபதி!



தாராசுரம்
கோ.மணி

2001-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மேயர், தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்களின் பொற்கரங்களால் கும்பகோணத்தில் உள்ள தாராசுரம் அண்ணா சிலையும், புதிய பேருந்து நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

அந்த நிகழ்வில், சோழ மண்டலத் தளபதி, அன்றைய அமைச்சர் அண்ணன் கோ.சி.மணி, தஞ்சை மாவட்டச் செயலாளர் - இன்றைய மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் சு.கல்யாணசுந்தரம், ஒன்றியப் பெருந்தலைவர் இன்றைய கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் உள்ளனர். அன்று தாராசுரம் சுற்றுவட்டார மக்கள் பேருந்து நிலையம் செல்ல, மிகவும் சிரமப்பட்ட காலத்தில், தளபதி அவர்களிடம் இதைப் பற்றி கூறியபோது, உடனே இதற்கான பணிகளைத் தொடங்கச் சொன்னார்.

**- தாராசுரம் கோ.மணி,**
**3-வது பகுதிக் கழக அவைத் தலைவர், கும்பகோணம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடு!

1975-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி, கழகத்தின் 5-வது மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது. கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னர், நடைபெற்ற இந்த மாநாட்டில் நெருக்கடி நிலைக்கு எதிராக இரண்டு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ‘சுதந்திரத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது பெரிய அரசியல் மாநாடு இது’ என பத்திரிகைகள் எழுதின.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131